**கண்டி மாநகர சபை**
**கண்டி மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 29 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 செப்தம்பர் 07 ஆந் திகதி சபையிக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்களானவை கண்டி மாநகர சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டு குறைபாடுகள்

(அ) மீளாய்வாண்டின்போது நன்கொடையாக கிடைத்திருந்த 02 உழவு இயந்திர டோலர்களின் பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 769,498 பெறுமதியான 07 இயந்திரங்கள் மற்றும் பொறிகள் மற்றும் அலுவலக உபகரணங்கள் விடயங்கள் ரூபா 130,962 என கணக்கீடு செய்த காரணத்தினால் நிலையான சொத்துக்கள் ரூபா 638,536 ஆல் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்ததுடன் ரூபா 45,136 பெறுமதிக்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்த 03 சொத்து விடயங்கள் ரூபா 2,711,468 எனக் கணக்கீடு செய்த காரணத்தினால் நிலையான சொத்துக்கள் ரூபா 2,666,332 ஆல் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) 2016 பொருள் மெய்மையாய்வில் கைதவிர்ப்பதற்கு பரிந்துரை வழங்கப்பட்டிருந்த ரூபா 1,535,119 பெறுமதியான 167 நிலையான சொத்து விடயங்கள் 2018 ஆகஸ்ட் வரை கைதவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருக்கையில் மீளாய்வாண்டில் கணக்குகளிலிருந்து அப்பெறுமதி அகற்றப்பட்டிருந்தது.

(ஈ) பெறுமதி இனங்காண முடியாத தீயணைக்கும் வண்டியொன்று மீளாய்வாண்டில் ரூபா 291,160 பெறுமதிக்கு ஏலவிற்பனை செய்யப்பட்டிருந்த போதும் அதன் கிரயம் கணக்குகளிலிருந்து அகற்றப்பட்டிருக்கவில்லை.

(உ) 2010 பெப்ரவரி 04 ஆந் திகதி முதல் மாநகர தொழில்நுட்ப வேலைத்தளத்தில் விளைவற்ற வகையில் காணப்பட்ட ரூபா 65,000 பெறுமதியான மோட்டார் சைக்கிள் ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டு பெறுமதி கணக்குகளிலிருந்து அகற்றும் போது ரூபா 165,000 என மோட்டார் வண்டிக் கணக்கிற்கு செலவு வைத்த காரணத்தினால் நிலையான சொத்துக்கள் ரூபா 100,000 குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஊ) மெனிக்கும்புற மொத்த மற்றும் சில்லறை வியாபார கடை தொகுதிகளுக்குரிய கடை வாடகை பதிவேட்டின் பிரகாரம் மீளாய்வாண்டின் வருமானம் ரூபா 5,034,660 ஆக இருந்த போதிலும் ரூபா 5,305,268 என கணக்கீடு செய்த காரணத்தினால் ஆண்டின் வருமானம் ரூபா 270,608 ஆல் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(எ) 17 வியாபார தொகுதிகளில் 857 கடைகளின் மீளாய்வாண்டிற்குரிய கடை வாடகை வருமானம் ரூபா 53,757,607 ஆக இருந்த போதிலும் அது ரூபா 55,628,750 எனக் கணக்கீடு செய்த காரணத்தினால் கடை வாடகை வருமானம் ரூபா 1,871,143 ஆல் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஏ) மீளாய்வாண்டில் கேள்வி கோரி குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்த மத்திய வியாபாரச் சந்தையில் 02 இறைச்சிக் கடைகளுக்குரிய கேள்வி கட்டண வருமானம் ரூபா 3,809,000 தொகை மீளாய்வாண்டின் வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஐ) முன்னைய ஆண்டின் இறுதி திகதி வரை களஞ்சியத்திலிருந்து வழங்கப்பட்டிருந்த ரூபா 12,428,694 பெறுமதியான களஞ்சிய பொருட்கள் மீளாய்வாண்டின் செலவினமொன்றாக கணக்கீடு செய்தமையால் செலவினம் அப்பெறுமதியால் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஒ) மீளாய்வாண்டின் தீர்வு செய்யப்பட்டிருந்த ரூபா 12,127,946 கூட்டுப்பெறுமதியான பொது வைப்புக்கள் கொடுக்கல் வாங்கல்கள் வைப்புக் கணக்கிற்கு ரூபா 12,387,747 என வரவு வைக்கப்படாமையால் பொது வைப்புக்கள் ரூபா 259,801 ஆல் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஓ) 2017 சனவரி 01 இல் நிலுவை நீர்க் கட்டணங்கள் ரூபா 95,685,642 ஆக இருந்த போதிலும், அது ரூபா 100,906,507 எனக் கணக்குகளில் காண்பிக்கப்பட்ட காரணத்தினால் 2017 சனவரி 01 ஆந் திகதியில் உள்ளவாறு நிலுவை மீதி ரூபா 5,220,865 கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஔ) நீர்க் கைத்தொழில் திணைக்களத்தின் தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்குரிய நீர்க்கட்டண பட்டியல் வருமானம் ரூபா 436,769,100 ஆக இருந்த போதிலும் அது ரூபா 402,055,179 எனக் கணக்கீடு செய்த காரணத்தினால் வருமானம் ரூபா 34,713,921 ஆல் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஔ) முன்னைய ஆண்டிற்குரிய மீளாய்வாண்டில் கிடைத்திருந்த ரூபா 444,480 ஆன முச்சக்கர வண்டிக் கட்டணங்கள் மீளாய்வாண்டின் வருமானமொன்றாக கருதி கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்குரிய பெறவேண்டிய முச்சக்கர வண்டி கட்டணங்கள் ரூபா 23,372,709 தொகை நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(க) முன்னைய ஆண்டிற்காக ரூபா 5,521,782 ஆன நீதிமன்ற தண்டப்பணம் மீளாய்வாண்டில் கிடைத்திருந்த போதிலும் ஆரம்ப மீதியாக ரூபா 3,385,567 மாத்திரம் கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக ஆரம்ப மீதி ரூபா 2,136,215 ஆல் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(கா) மீளாய்வாண்டின் ஒக்தோபர் நவம்பர் மற்றும் திசெம்பர் மாதங்களுக்காக கிடைக்க வேண்டிய நீதிமன்ற தண்டப்பணக் கட்டணத் தொகை ரூபா 1,269,304 கிடைக்க வேண்டிய வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(கி) நீதிமன்ற தண்டப்பண பதிவேட்டின் பிரகாரம் மீளாய்வாண்டில் பட்டியலிடல் ரூபா 11,021,707 ஆக இருந்த போதிலும் கணக்குகளில் ரூபா 13,020,493 எனக்

காண்பிக்கப்படாமையால் ஆண்டின் வருமானம் ரூபா 1,998,786 ஆல் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(கீ) கண்டிக் குளத்தில் படகு சேவையை நடாத்திச் செல்வதை குத்தகைக்கு வழங்குவதற்காக எதிர்வரும் ஆண்டிற்காக கிடைத்திருந்த ரூபா 218,257 குத்தகை தொகை மீளாய்வாண்டின் வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(கு) மலசலகூடங்களை குத்தகைக்கு வழங்கியதற்காக மீளாய்வாண்டிற்குரிய வருமானம் ரூபா 8,984,448 ஆக இருந்த போதிலும், அது ரூபா 8,920,410 எனக் கணக்கீடு செய்த காரணத்தினால் வருமானம் ரூபா 64,038 ஆல் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(கெ) மலசலகூடங்களை குத்தகைக்கு வழங்குவதற்காக மீளாய்வாண்டின் இறுதியில் கிடைத்திருந்த பெறுவனவு ரூபா 9,820,259 ஆக இருந்த போதிலும் அது ரூபா 19,163,162 எனக் கணக்கீடு செய்த காரணத்தினால் முற்பண பெறுவனவு ரூபா 9,342,903 ஆல் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது.

**1.3.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்**

நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 8 கணக்கு விடயங்களின் மீதிகின் கூட்டுத்தொகை ரூபா 827,525,152 ஆக இருந்ததுடன், அதற்குரிய பதிவேடுகள் மற்றும் அட்டவணைகளின் பிரகாரம் அக்கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 661,861,771 ஆக இருந்தமையால் ரூபா 165,663,381 தொகையான வேறுபாடு கண்டறியப்பட்டது.

**1.3.3 பெறவேண்டிய மற்றும் செலுத்தப்பட வேண்டிய கணக்குகள்**

**(அ) பெற வேண்டிய கணக்குகள்**

2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 10 பெறவேண்டிய கணக்கு மீதிகளின் கூட்டுப்பெறுமதி ரூபா 549,611,810 ஆக காணப்பட்டதுடன். அவற்றில் 1 வருடத்திற்கும் 5 வருடங்களுக்கும் இடைப்பட்ட காலமாக இருந்த கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 90,871,720 ஆக காணப்பட்டது. அவ்வாறே 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 244,167,359 ஆக இருந்தது. 2018 ஆகஸ்ட் 24 ஆந் திகதி உள்ளவாறு ரூபா 448,369,519 மீதியொன்று மேலும் அறவிட வேண்டியதாக இருந்தது.

**(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்**

2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 03 கடன்கொடுத்தோர் மீதிகளின் கூட்டுப்பெறுமதி ரூபா 992,436,957 ஆக இருந்ததுடன் 1 வருடத்திற்கும் 5 வருடங்களுக்கும் இடைப்பட்ட காலமாக இருந்த கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 90,462,557 ஆக காணப்பட்டது. 2018 ஆகஸ்ட் 24 ஆந் திகதி உள்ளவாறு ரூபா 556,710,571 மீதியொன்று மேலும் செலுத்த வேண்டியதாக இருந்தது.

**1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(ஆ) தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்படாத காரணத்தால் ரூபா 1,191,692,284 கூட்டுத்தொகையான 13 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தன.

(ஆ) பரிசோதனை சந்தர்ப்பத்தில் வழங்கப்பட்டிருந்த மீளாய்வாண்டின் இறுதியில் நிலுவையான ரூபா 123,552,618 ஆன வீதவரி மற்றும் நிலையான ரூபா 118,832,877 ஆன நீர்க்கட்டணம் தொடர்பான காலப்பகுப்பாய்வு கணனி மென்பொருளிலிருந்து பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது.

**1.3.5 இணக்கமின்மைகள்**

கீழே காட்டப்பட்டுள்ள சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் முதலியவற்றுடனான தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மை |
|---|---|---|
| | ரூபா | |
| (அ) மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 247(அ)(1) ஆம் பிரிவு | 681,003 | மாநகர சபை எல்லையில் சுற்றுலா சபையில் பதிவு செய்யப்பட்டுள்ள ஹொட்டல்களில் கழிந்ததன் பின்னர் வருமானத்திலிருந்து அனுமதிப்பத்திரக் கட்டணமொன்று அறவிடப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 2003 செப்தெம்பர் 05 ஆந் திகதிய 1304/18 ஆம் இலக்க கண்டி மாநகர சபையின் உப உறுப்புரையின் iv ஆம் பகுதியின் களஞ்சியம் தொடர்பான விதி | | மத்திய களஞ்சியம், நிதிக் களஞ்சியம் மற்றும் ஆயுர்வேத மருந்துக் களஞ்சியத்தில் 2017 ஆம் ஆண்டிற்குரிய கணிப்பீட்டு அறிக்கை 2018 யூலை 18 ஆந் திகதி வரை சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. அவ்வாறே கணிப்பிட்டு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள 07 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக இனங்காணப்பட்ட வேறுபாடுகளை சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. |
| (இ) இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் தாபனவிதிக் கோவையின் xix ஆம் அத்தியாயம் | | |
| (i) 03 ஆம் பந்தி | | சபைக்கு சொந்தமான 67 வீடுகள் அவற்றைப் பெற்றுக்கொள்வதற்கு தகைமையுள்ள உத்தியோகத்தர் களின் தரங்களின் பிரகாரம் தரப்படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| (ii) 4.3.4 ஆம் பந்தி | | ஒவ்வொரு வீடுகளினதும் தரங்களிற்காக வெவ்வேறாக காத்திருக்கும் பட்டியலொன்று பேணப்படாமல் சபையின் சகல உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களுக்காக ஒரு காத்திருக்கும் பட்டியல் பராமரிக்கப்பட்டிருந்தது. |

| | | | |
|---|---|---|---|
| | (iii) 6.1 ஆம் பந்தி | | சபைக்குச் சொந்தமான 05 பொது வீடுகளில் உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் 05 பேர் 05 ஆண்டுகளுக்கும் 28 ஆண்டு களுக்கும் இடைப்பட்ட காலவீச்சில் குடியிருந்தனர். |
| | (iv) 8.1 மற்றும் 8.2 ஆம் பந்தி | | 69 அரச வீடுகளில் மின்சார உபகரணங்கள், ஏனைய உபகரணங்கள் மற்றும் பூட்டு சாவிகள் போன்றவை தொடர்பான பொருளிப்பு பட்டியலொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் தாபனவிதிக் கோவையின் xix ஆம் அத்தியாயம் | | |
| | (i) 1645(அ) | | 154 வாகனங்களுக்காக சம்பவ பதிவேட்டு புத்தகங்கள் பேணப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) 1645(ஆ) | 234,665 | பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட இரண்டு வாகனங்களுக்காக 2017 பெப்ரவரி முதல் ஆகஸ்ட் வரையான காலப்பகுதியில் ஓட்டக் குறிப்புக்களில் பிரயாணம் தொடர்பான விபரங்கள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. அக் காலப்பகுதியில் 6,082 கிலோ மீற்றர் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டு அதற்காக செலவினம் மேற் கொள்ளப்பட்டிருந்தது. |
| | (iii) நி.பி 1647(அ) | | 76 வாகனங்களுக்குரிய சம்பவப் பதிவேடுகளில் தேவையான குறிப்புக்கள் இட்டு முறையாக பேணப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | -- | கணனி, உப பாகங்கள் என்பவற்றை பதிவு செய்வதற்கு மென் பொருட்கள் தொடர்பான பதிவேடொன்று பேணப்பட்டிருக்க வில்லை. |
| (ஊ) | பெறுகை வழிகாட்டல் கோவையின் 5.4.12 வழிகாட்டி | | பெறுமதிசேர் வரி மேவுகைக்காக பணம் கொடுப்பனவு செய்யப்பட்டதன் பின்னர் அது தொடர்பாக உள்நாட்டு இறைவரி ஆணையாளருக்கு அறிவிக்கும் போது அதற்குரிய தரவுகளின் பிரதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு தொடர்பு படுத்தப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| (எ) | உள்ளூராட்சி மன்ற ஆணையாளரின் சுற்றறிக்கை | | | |
| | (i) | 2011 ஒக்தோபர் 14 ஆந் திகதிய 2/2011 ஆம் இலக்க சுற்றறிக்கை | 66,571,614 | 2017 ஆம் ஆண்டில் நேரடி முறைமையின் கீழ் செயற்படுத்தப் பட்டிருந்த 60 கைத்தொழில்களுக்கு உரிய வழங்கப்பட்டிருந்த வேலைப்பத்திரங்களின் பொருட்கள் மற்றும் ஊழியர் மதிப்பீடு, நிறைவேற்றப்பட்ட வேலை களுக்காக அங்கீகாரம் மற்றும் பரிந்துரைகள் போன்றன பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) | 2014 மார்ச் 20 ஆந் திகதிய 2014/2 ஆம் திகதிய சுற்றறிக்கையின் 03 ஆம் பந்தி | 60,421,000 | மீளாய்வாண்டின் போது ரூபா 1,871,312,000 தொகை மொத்த மீண்டெழும் செலவினத்தில் திருத்த வேலை மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகளுக்காக 50 சதவீதம் ஒதுக்கீடு செய்யப்பட வேண்டிய போதிலும் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை 03 சதவீதமான சிறிய அளவாக இருந்தது. |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 520,473,900 ஆகக் காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 518,109,683 ஆகக் காணப்பட்டது.

**2.2 நிதிக் கட்டுப்பாடு**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) வழங்கப்பட்ட போதிலும் கொடுப்பனவிற்கு சமர்ப்பிக்கப்படாத காசோலையாக வங்கி இணக்கக் கூற்றில் குறிப்பிடப்பட்டிருந்த ரூபா 72,098 பெறுமதியான 14 காசோலைகள் பெறுவோனுக்கு வழங்கப்படாமல் 2018 ஆகஸ்ட் வரையிலும் விடயத்திற்குப் பொறுப்பான உத்தியோகத்தர் பொறுப்பில் வைக்கப்பட்டிருந்தன.

(ஆ) 2013 ஆம் ஆண்டு முதல் 2017 ஆண்டு வரையான காலப்பகுதியில் வைப்புச் செய்யப்பட்டிருந்த போதிலும், தீர்வையாகாத ரூபா 87,150 பெறுமதியான காசோலைகளும் 18 காசுக் கட்டளைகளும் தொடர்பாக ஆராய்ந்து பார்த்து தீர்வுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 02 வங்கிக் கணக்குகளுக்குரிய வங்கியின் நேரடி செலவு வைத்தல்களாக குறிப்பிடப்பட்டிருந்த ரூபா 929,098 பெறுமதியான இனங்காணப்பட்ட 15 வங்கி வைப்புக்கள் இணங்காணப்பட்டு தீர்வுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 02 வங்கிக் கணக்குகளுக்குரிய வங்கியின் நேரடி வரவு வைத்தல்களாக குறிப்பிடப்பட்டிருந்த ரூபா 112,101 பெறுமதியான இனங்காணப்பட்ட 11 விடயங்கள் இணங்காணப்பட்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) வங்கிக் கணக்குகளுக்காக 2015 ஆம் ஆண்டில் 02 சந்தர்ப்பங்களின் போது நேரடி வைப்புக்களாக கிடைக்கப்பெற்றிருந்த ரூபா 114,595 தொகை 2018 யூலை 31 ஆந் திகதி வரையிலும் இணங்கண்டு நடவடிக்கை எடுக்கப்படாமல் வைப்புக் கணக்கில் நிறுத்திவைக்கப்பட்டிருந்தது.

## 2.3 வருமான நிர்வாகம்

### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரித்தாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் நிலுவை |
| | | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. |
| (i) | வீதவரி மற்றும் வரி | 839,543,000 | 951,640,588 | 821,071,501 | 285,599,883 | 320,000,000 | 290,791,296 | 292,332,768 | 100,380,560 |
| (ii) | வாடகை | 116,533,000 | 65,179,198 | 67,087,038 | 62,046,007 | 105,501,000 | 67,870,036 | 74,907,290 | 98,906,302 |
| (iii) | அனுமதிப் பத்திர கட்டணங்கள் | 46,495,000 | 31,227,877 | 31,227,877 | -- | 36,331,000 | 30,459,082 | 30,459,082 | -- |
| (iv) | ஏனைய வருமானம் | 576,462,000 | 476,941,161 | 322,459,698 | 424,389,671 | 1,359,327,000 | 474,772,898 | 564,743,177 | 258,256,640 |
| | மொத்தம் | 1,579,033,000 | 1,524,988,824 | 1,241,846,114 | 772,035,561 | 1,821,159,000 | 863,893,312 | 962,442,317 | 457,543,502 |

### 2.3.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஒட்டுமொத்த திரட்டிய மூலகத்திலிருந்து 457,543,502 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு அப்பெறுமதி ரூபா 772,035,561 ஆக இருந்த காரணத்தினால் அந்நிலுவை வருமானங்களின் அதிகரிப்பு 59 சதவீதமாக இருந்தது.

### 2.3.3 வீத வரியும் வரிகளும்

**(அ) வீதவரி**

2017 சனவரி 01 இல் உள்ளவாறு நிலுவை வீதவரி மீதி ரூபா 127,529,521 ஆக இருந்ததுடன், 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரை பட்டியல் இடப்பட்டவை ரூபா 317,493,192 ஆக இருந்தது. 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரை நிலுவையிலிருந்தும் பட்டியலிடலிருந்தும் ரூபா 73,178,018 மற்றும் ரூபா 238,141,102 மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது, இது 57 சதவீதமாகவும் 75 சதவீதமாகவும் இருந்தன. 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 133,703,593 ஆன நிலுவை மீதியொன்று காணப்பட்டதுடன் 2018 மார்ச் 31 ஆந் திகதி வரையிலும் ரூபா 87,119,124 மேலும் அறவிடுவதற்கு இருந்தது.

**(ஆ) காணி வரி**

2017 சனவரி 01 இல் உள்ளவாறு நிலுவை வீதவரி மீதி ரூபா 34,952,454 ஆக இருந்ததுடன் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரை அம்மீதிகளில் ரூபா 1,917,383 மாத்திரம் அறவிடப்பட வேண்டியிருந்தன. வரி அறவீடு 05 சதவீதமாக இருந்ததடன், காணி வரி மீதி நிலுவையொன்றை அறவிடுவது மிகவும் பலவீனமான மட்டத்தில் காணப்பட்டன.

**2.3.4 குத்தகை வாடகை**

2017 சனவரி 01 இல் உள்ளவாறு நிலுவை வாடகை மீதி ரூபா 62,601,539 ஆக இருந்ததுடன், 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரை நிலுவையிலிருந்தும் பட்டியலிடலிருந்தும் முறையே ரூபா 27,103,002 மற்றும் ரூபா 37,095,686 மாத்திரம் அறவிடப்பட்டிருந்தன. இது 43 சதவீதமாகவும் 59 சதவீதமாகவும் இருந்ததுடன், 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூா 60,806,104 ஆன நிலுவை மீதியொன்று காணப்பட்டது. அதன் பிரகாரம் வாடகை அறீடு பலவீனமான மட்டத்தில் காணப்பட்டதுன். 2018 யூன் 30 ஆந் திகதி வரையிலும் ரூபா 47,853,462 மேலும் அறவிடுவதற்கு இருந்தது.

**2.3.5 ஏனைய வருமானம்**

**முச்சக்கர வண்டிக் கட்டணங்கள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2017 சனவரி 01 இல் உள்ளவாறு நிலுவை முச்சக்கர வண்டிக் கட்டணங்கள் ரூபா 16,922,789 ஆக இருந்ததுடன், 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரை ரூபா 444,480 மாத்திரமே அறவிடப்பட்டிருந்தது. நிலுவை கட்டண அறவீடு 2 சதவீதமாக இருந்தமையால் நிலுவை முச்சக்கர வண்டிக் கட்டணங்கள் அறவீடு பலவீனமான நிலையில் காணப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டிற்காக முச்சக்கர வண்டி கணிப்பீடொன்று மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை.

**2.3.6 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

மாகாண சபையின் பிரதான செயலாளரிடமும் ஏனைய அதிகாரிகளிடம் இருந்தும் 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 5,965,152 ஆன நீதிமன்றத் தண்டப்பணமும் ரூபா 177,948,417 ஆன முத்திரைக் கட்டணங்களும் அறவிடப்பட வேண்டியிருந்தன. 2018 யூன் 30 ஆந் திகதி வரையிலும் ரூபா 141,327,627 மாத்திரம் மேலும் அறவிடுவதற்கு இருந்தது.

**3.1 செயலாற்றல்**

மாநகர சபை சட்டத்தின் 04 ஆவது பிரிவின் கீழ் பொதுச் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் கட்டுப்படுத்தல், மக்களின் நலனோம்புகை மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டிய பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

**(அ) எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் நிறைவேற்றப்படாமை**

வீதிகளில் மோட்டார் வாகனங்களை நிறுத்தி வைப்பதை கட்டுப்படுத்துவதற்காக வீதிகளில் கூடிய நேரம் நிறுத்தி வைக்கும் வாகனங்களிலிருந்து கூடிய கட்டணமொன்று அறவிடுவதற்காக தனியார் நிறுவனமொன்றுக்கு வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தது. எனினும், கட்டணங்களை அறவிடாமல் நாள் முழுவதும் வீதிகளில் நிறுத்தி வைப்பதற்கு இடமளிக்கப்பட்டமையால் அந்நோக்கங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) செயல்நடவடிக்கைத் திட்டம்**

மாநகர ஆயுர்வேத திணைக்களத்தின் 2017 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் நகர மக்களுக்காக மருந்துகளை சலுவை விலையில் விற்பனை செய்வதற்காக நவீன இயந்திர உபகரணங்களுடன் கூடிய மருந்து உற்பத்தி ஆரம்பிக்கப்பட்டிருந்ததாக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் உத்தியோகத்தர்கள் பற்றாக்குறை போதியளவு மேற்பார்வை இல்லாமையின் பேரில் உற்பத்தி போதியளவில் இடம்பெற்றிருக்கவில்லை. அநேகமான மருந்து வகைகள் 2014, 2015, 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளின் பின்னர் உற்பத்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

**(இ) நிறைவேற்றப்படாத செயற்பாடு**

ஆயுர்வேத திணைக்களத்தின் ஊழியர்களுக்காக 2017 வருடாந்த பாதீட்டின் மூலம் சீருடைக்காக ரூபா 500,000 நிதிஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும், 2017 திசெம்பர் 31 வரையிலும் அந்நிதி ஏற்பாட்டில் 94 சதவீதம் செலவிடப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) திண்மக்கழிவுப் பொருள் முகாமைத்துவம்**

உக்கும் கழிவுப்பொருட்களை பயன்படுத்தி கொம்போஸ்ட் உற்பத்தி செய்யும் செயற்பாட்டிற்காக ரூபா 4,000,000 நிதிஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதிவரை ரூபா 3,948,447 நிதிஏற்பாடு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**(உ) நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை செயற்படுத்துவதற்கு உரித்தன உள்ளக சுற்றறிக்கைகள் மற்றும் வழிகாட்டில்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத்துவதாக குறிப்பிடப்பட்டிருந்த அநேகமான நிகழ்ச்சித்திட்டங்கள் சபை அதற்கு முன்னர் இருந்தே செயற்படுத்தப்பட்டு வந்த நிகழ்ச்சித்திட்டங்களாகவே இருந்தன.

(iii) நிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத்துவதற்காக பதவியணியினரை ஈடுபடுத்தும் நடைமுறையொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) கண்டி நகரில் டிஜிடல் அறிவித்தல் திரைகளை பேணிச் செல்வதற்காக தனியார் நிறுவனமொன்றுடன் மேற்கொண்ட இணக்கப்பாட்டின் பிரகாரம் ஒரே தடவையில் அறவிடப்பட வேண்டிய ரூபா 500,000 தொகையும் எஞ்சிய 1,500,000 ஐ 24 தவணைகளில் அறவிடுவதற்கு 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அஸ்கிரிய இலவச ஆயுர்வேத மருந்தகத்தின் மருத்துவ சிகிச்சைக்காக நோயாளர்களுக்கு வழங்கப்பட வேண்டிய 31 மருந்து வகைகள் 01 ஆண்டிற்கும் 05 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் கிடைத்திருக்கவில்லை.

(இ) 2017 ஆகஸ்ட் எசல மெகா களியாட்ட தினங்களில் முத்திரை பொறிக்கப்படாத இலக்கமில்லாத போலியான நுழைவுச்சீட்டுக்கள் வழங்கப்பட்டிருந்ததாக வருமான பரிசோதகர்களால் அறிக்கையிடப்பட்டிருந்த போதிலும் அது தொடர்பாக எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) கண்டி பொது வைத்தியசாலைகளுக்காக போகம்பர மார்புச் சிகிச்சை நிலையத்திற்கு முன்னோக்கி செல்லும் ஒடுங்கிய நெரிசலான வீதியின் இருபக்கத்திலும் வாரச் சந்தையொன்று நிறுவப்பட்டிருந்தமையால் தங்கிச் சிகிச்சை பெறும் நோயாளிகளுக்கும் வைத்தியசாலைக்கும் பிரயாணிக்கும் நோயாளர்களுக்கும் வசதியீனமாக இருந்ததுடன் நகரில் அதிக வாகன நெரிசல் மேலும் அதிகரிப்பதற்கு காரணங்களாக இருந்தது.

## 3.3 மனித வள முகாமைத்துவம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையின் வெற்றிடப் பதவிகள் 163 மற்றும் 04 மிகை பதவிகளும் காணப்பட்டன. 136 பேர் அமைய / சமயா சமய அடிப்படையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

(ஆ) 1994 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் ஓய்வுபெற்ற, சேவையை விட்டுச் சென்ற, வேலை இடைநிறுத்தம் செய்யப்பட்ட மற்றும் இடமாற்றம் பெற்றுச் சென்ற 282 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 19,018,526 தொகையை தீர்வுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.4 செயற்பாட்டு வினைத்திறனின்மை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டில் கொம்போஸ்ட் கூடைகள் விற்பனையால் கிடைக்கப்பெற்றிருந்த ரூபா 582,905 ஆன வருமானம் வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) குறித்துரைக்கப்பட்ட செயற்பாடுகளுக்காக வெவ்வேறு தரப்பினரிடமிருந்து 06 சந்தர்ப்பங்களின் போது கிடைத்திருந்த 2,418,657 இற்குரிய செயற்பாடுகளுக்காக பயன்படுத்தாமல் வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன.

(இ) சபை அதிகாரப் பிரதேசத்தில் குடியிருக்கும் ஒருவரால் பொது நுழைவு வீதிக்கு இடையூறான வகையில் வீடொன்று நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் அந்த அனுமதியற்ற நிர்மானத்தை அகற்றுமாறு நகரசபை மற்றும் நீதிமன்றத்தினால் 2005 ஆம் ஆண்டு முதல் கட்டளையிடப்பட்டிருந்தது. அதற்கு இணங்காத மேற்படி குடியிருப்பாளர் தொடர்பாக விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சருக்கு தகவல்களை தவறாக தெரிவித்து சபைக்குரிய வலய அலுவலகம் அமைந்துள்ள இடத்திலிருந்து மேற்குறித்த வீட்டுக்கு நுழைவு வீதியொன்றை பெற்றுக்கொள்ள இடமளிக்கப்பட்டிருந்தது.

## 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.5.1 விளைவற்ற/ குறைப்பயனபாட்டிலான சொத்துக்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) ரூபா 235,361 பெறுமதியான குழாய்கள் மற்றும் 10 உபபாகங்கள் மற்றும் பெறுமதி மதிப்பிட முடியாத 21 குழாய்கள் மற்றும் உபபாகங்கள் என்பன 1980 ஆம் ஆண்டு முதல் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் நீர்க் களஞ்சியத்தில் விளைவற்ற வகையில் காணப்பட்டன.

(ஆ) நீர்க்குழாய் செயற்திட்டமொன்று நிறைவுபெற்றதன் பின்னர் சபைக்கு கையளிக்கப்பட்டிருந்த பதிவேடுகளுக்கு உட்படுத்தப்படாதிருந்த 300 நீர்த் தாங்கி உபகரணங்கள் மற்றும் 144 ஏனைய நீர் குழாய் உபபாகங்கள் பயன்படுத்தப்படாமல் களஞ்சியத்தில் காணப்பட்டன.

(இ) பாவனையிலிருந்து அகற்றப்பட்ட வெவ்வேறு பிரிவுகளிலிருந்து கையளிக்கப்பட்டிருந்த மற்றும் நீர்க் களஞ்சியத்திலிருந்து பாவனையிலிருந்து அகற்றப்பட்ட 167 நீர்க் குழாய் உபபாகங்கள் கைதவிர்ப்புச் செய்யாமல் களஞ்சியப்படுத்தியிருந்தன.

(ஈ) திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவ பிரிவுக்குரிய ஓட்ட நிலைமையில் காணப்படும் ரூபா 4,243,700 பெறுமதியான களி வண்டியொன்றும் நீர் சுத்தகரிப்பு கூடத்திற்குரிய ரூபா 2,160,000 பெறுமதியான நீர் பௌசரொன்றும் 06 மாதங்களுக்கு மேற்பட்ட காலமாக விளைவற்ற வகையில் நீர் சுத்திகரிப்பு வளவில் திறந்த வெளியில் உக்கலடைவதற்கு இடமளிக்கப்பட்டிருந்தது. களி வண்டி பயன்படுத்தப்படாத காலப்பகுதியில் ரூபா 79,690 செலவிடப்பட்டு உதிரிபாகங்கள் இட்டு மாநகர இயந்திர பொறியிலாளரின் மேற்பார்வையொன்றும் இல்லாமல் திருத்தஞ் செய்யப்பட்டிருந்தது.

(உ) 05 ஆண்டுகளுக்கு முன்னர் கழற்றி அகற்றப்பட்ட 02 பிரிம்ரோஸ் (மொனோ) பம்பிகள் மற்றும் பல வருடங்களுக்கு முன்னர் பயன்பாட்டிலிருந்து அகற்றப்பட்டிருந்த DI மற்றும் CI வகையிலான பாரியளவிலான நீர்க் குழாய்கள் மற்றும் உபபாகங்கள் இருப்பொன்று கைதவிர்ப்புச் செய்யப்படாமல் 2018 யூலை 31 ஆந் திகதி வரையில் நீர் சுத்திகரிப்பு கூட வளவில் குவித்து வைக்கப்பட்டிருந்தன.

(ஊ) சபையின் பொதுசன உதவி மற்றும் நலன்புரி திணைக்களத்திற்குரிய எரிவாயு அடுப்புக்கள், எரிவாயு சிலிண்டர், தையல் இயந்திரங்கள் உட்பட 37 பொருள் வகைகள் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமலோ அல்லது பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படாமல் 2009 ஆம் ஆண்டிற்கு முன்னர் மஹியாவ தைக்கும் கட்டிடமொன்றில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தன. அவ்வாறே எவ்வித பொருள் மெய்மையாய்விற்கு உட்படாதிருந்த இந்த இருப்பு பதிவேடுகளுக்கும் உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(எ) மஹய்யாவ தையல் நிலையத்திற்கு 2010 ஆம் ஆண்டில் நன்கொடையாக கிடைத்திருந்த 02 ஓவர்லொக் மெஷின்கள் ஜுகி இயந்திரமும் பயன்படுத்தப்படாமல் பொதியுடன் 2018 யூலை 31 ஆந் திகதி வரையிலும் உரிய நிலையத்தில் அழிவடைவதற்கு இடமளிக்கப்பட்டிருந்தது.

(ஏ) பொலித்தின் மீள்சுழற்சிக்காக பயன்படுத்தக்கூடிய கம்பெக்டர் இயந்திரம் 2014 ஆம் ஆண்டில் மத்திய சுற்றாடல் அதிகாரசபைக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் அத்திகதி முதல் 2018 ஆகஸ்ட் வரையிலும் உரிய செயற்பாட்டிற்காக பயன்படுத்தப்படாமல் கொஹாகொட கழிவுப்பொருள் வளவில் விளைவற்ற வகையில் காணப்பட்டது.

### 3.5.2 வருடாந்த பொருள் / இருப்பு பரிசோதனை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சுவ பியச விற்பனை கூடம், பஞ்சகர்ம பிரிவு, ஆயுர்வேத மருந்து உற்பத்திச்சாலை மற்றும் 10 ஆயுரவேத மருந்தகங்கள் என்பவற்றில் வருடாந்தம் மேற்காள்ளப்பட வேண்டிய இருப்பு மெய்மையாய்வு வருடக் கணக்கில் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதியில் காணப்பட்ட எழுதுகருவி இருப்பு பௌதீக ரீதியாக பரீட்சித்து மெய்மையாய்வு அறிக்கை தயாரிக்கப்படாமை காரணமாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படும் ரூபா 9,638,849 ஆன எழுதுகருவி இருப்பின் சரியான தன்மை உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 3.5.3 வாகனப் பயன்பாடு

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) டிபர் வண்டியொன்றின் இயந்திரத்தில் காணப்பட்ட தவறுகளை இனங்காணாமல் வாகனத்திற்கு 02 லீற்றர் உராய்வு நீக்கி இட்டு வாகனத்தை ஓட்டத்தில் ஈடுபடுத்துவதற்கு உட்படுத்தப்பட்டமையால் 2017 திசெம்பர் 07 ஆந் திகதி என்ஜின் முழுமையாக செயலற்றுப் போனமையால் முகவர் நிறுவனமொன்று ஊடாக என்ஜினொன்று மாற்றுதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் 2018 யூலை 31 ஆந் திகதி வரையிலும் திருத்தம் செய்யப்படாதிருந்நதுடன் அதற்குரிய பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) உழவு இயந்திரத்தின் வேலைப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்ட தவறுகள் திருத்தம் செய்யப்படாமல் பரிந்துரையொன்றோ அங்கீகாரமொன்றோ இல்லாமல் காற்று இறங்குவதற்குரிய திருத்தவேலை செயற்பாடு எனக் குறிப்பிட்டு ரூபா 97,000 செலவிடப்பட்டிருந்ததுடன் உதிரிப்பாகங்கள் கொள்வனவு செய்து வாகனத்தின் திருத்த வேலைக்கு பயன்படுத்தப்பட்டிருந்தது.

(இ) வேன் வண்டிக்கு பிரேக் எண்ணைய் இட்டு திருத்துவதற்கு தொழில்நுட்ப உத்தியோகத்தர் பரிந்துரைத்து இருக்கையில் பிரேக் முறைமையை கழற்றி அகற்றி திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 1000 கி.மீ அளவில் ஓட்டத்தில் ஈடுபடுத்திய போது மீண்டும் தடுப்பு முறைமை செயப்படாமை காரணமாக 09 மாதங்களுக்குள் ஒரு தவறுக்காக 02 சந்தர்ப்பங்களில் செலவிடப்பட்ட ரூபா 69,200 ஆன செலவினம் பயனற்ற செலவினமாக மாறியிருந்தது.

(ஈ) 2014 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் வாகன திருத்த வேலைகள் பராமரிப்பு நடவடிக்கைகளுக்காக ரூபா 169,180,822 செலவிடப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டது.

(i) கடந்த 04 ஆண்டு காலப்பகுதியில் மாநகர கைத்தொழில் வேலைத்தளம் வாகனங்களை திருத்தம் செய்வதற்காக வழமையாக வருடமொன்றுக்கு ரூபா

42 மில்லியன் அளவில் செலவு செய்திருந்தது. காணப்படுகின்ற 227 வாகனங்களை அடிப்படையாகக் கொண்டால் வாகனமொன்றிற்காக ஓராண்டிற்குகான திருத்தக் கிரயம் அண்ணளவாக ரூபா 185,022 செலவிடப்பட்டிருந்தது.

(ii) கைத்தொழில் வேலைத்தளத்தினுள் வாகன திருத்த வேலைகள் இடம்பெற்ற போதும் மொத்த திருத்த செலவினத்தில் இது 2015 ஆம் ஆண்டின் போது 36 சதவீதமும், 2016 ஆம் ஆண்டின் போது 13 சதவீதமும் மீளாய்வாண்டின் போது 19 சதவீதத்திற்குரிய தனியார் நிறுவனங்கள் ஊடாக மேற்கொள்ளப்பட்டமையால் மாநகர வேலைத்தளத்தின் ஊடாக எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் போதியளவில் இடம்பெற்றிருக்கவில்லை.

(iii) மீளாய்வாண்டில் 30 உழவு இயந்திரங்களின் திருத்த வேலைகள் மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகளுக்காக மீளாய்வாண்டின் போது ரூபா 10,592,829 செலவிடப்பட்டிருந்ததுடன் ஒரு வண்டிக்காக வருடாந்த திருத்த வேலைகள் மற்றும் பராமரிப்பு செலவினம் ரூபா 350,000 ஆக இருந்தது.

(உ) கைத்தொழில் வேலைத்தளத்திற்கு பொறுப்பாக மாநகர இயந்திர பொறியியலாளர், வாகன திருத்த வேலைகள் தொடர்பாக எவ்வித மேற்பார்வையொன்றையும் மேற்கொள்ளப்படாதிருந்ததுடன் தெரிவுப் பரிசோதனையின் பிரகாரம் தொழில்நுட்ப உத்தியோகத்தர் / வேலை தலைவரின் பரிந்துரை மற்றும் மாநகர பொறியியலாளரின் அங்கீகாரம் அல்லது பரிந்துரையொன்று இல்லாமல் 23 வாகனங்களுக்காக 158 சந்தர்ப்பங்களில் ரூபா 4,691,950 செலவிட்டு உதிரிப்பாகங்கள் கொள்வனவு செய்து தொழில்நுட்பவிலாளர்களால் திருத்தியமைக்கப்பட்டிருந்தது.

(ஊ) வாகன திருத்த வேலைகளின் போது கழற்றி அகற்றிய உதிரிப்பாகங்கள் பதிவேடுகளுக்கு உட்படுத்தப்படாமையால் மீளாய்வாண்டில் உதிரிப்பாகங்கள் கொள்வனவு செய்வதற்காக செலவிடப்பட்ட ரூபா 26,479,568 செலவினத்தை கணக்காய்வின் போது திருப்திகரமாக பரீட்சிக்க முடியாதிருந்தது.

(எ) கலற்றி அகற்றிய வாகன உதிரிப் பாகங்கள் இருப்பொன்று முறையான கேள்வி நடைமுறையொன்றை பின்பற்றப்படாமல் 2018 பெப்ரவரி 02 ஆந் திகதி ரூபா 64,090 இற்கு வெளித்தரப்பினருக்கு விற்பனை செய்யப்பட்டிருந்தது.

(ஏ) விசேட செயற்திட்ட பிரிவிற்காக பெறுகை செயற்திட்டத்திலிருந்து விலகி டிபர் வண்டியொன்று வாடகை அடிப்படையில் பெற்றுக்கொண்டு 2017 பெப்ரவரி 01 ஆந் திகதி முதல் செப்தெம்பர் வரையான காலப்பகுதிக்காக மொத்தம் ரூபா 201,000 கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ஐ) வாகன திருத்த வேலைகளுக்காக ரூபா 611,884 ஆன உதிரிப்பாகங்கள் களஞ்சியத்திலிருந்து விநியோகிக்கப்பட்டிருந்த போதிலும் அதற்கான வேலைப்பத்திரங்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஐ) உழவு இயந்திரத்தின் அடிச்சட்டக பார் உடைத்தல் மற்றும் டேலர் தட்டு உருக்குலைதல் என்பவற்றை திருத்தம் செய்யாமல் ஏனைய திருத்த வேலைகளுக்காக ரூபா 83,100 செலவிடப்பட்டு உதிரிப்பாகங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. இந்த உதிரிபாகங்கள் பொருத்தப்படாமல் உழவு இயந்திர டேலர் கொஹாகொட கழிவுப்பொருள் பிரிவில் உருக்குலைவதற்கு இடமளிக்கப்பட்டிருந்தது. அவ்வாறு இருக்கையில் உழவு இயந்திர டேலர் குண்டசாலையில் அமைந்துள்ள மகநெகும வீதி

நிர்மாண நிறுவனத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டு திருத்தம் செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிட்டு ரூபா 214,370 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ஒ) மாநகர வேலைத்தளத்தில் வாகன திருத்த வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு சாரதிக்கு வாகனம் கையளிக்கப்பட்டதன் பின்னர் அவ்வாகனங்களின் திருத்த வேலைகளுக்கு தேவையான ரூபா 247,226 பெறுமதியான உதிரிபாகங்கள் 16 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்டிருந்தன.

### 3.6 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

(அ) கண்டி எசல பெரஹரவுடன் இணைந்ததாக சபைக்குரிய கெட்டம்பே விளையாட்டரங்கு மற்றும் கட்டுகஸ்தோட்ட ராகுல வித்தியாலயத்திற்குரிய விளையாட்டரங்கு என்பன 2017 யூலை 29 ஆந் திகதி முதல் 2017 ஆகஸ்ட் 08 ஆந் திகதி வரை எசல மெகா களியாட்ட விழாவை நடாத்துவதற்கு இடவசதிகள் வழங்கப்பட்டிருந்தன. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் (252 ஆம் அதிகாரம்) 227 ஆம் பந்திக்கு அமைவாக 2002 ஆகஸ்ட் 09 ஆந் திகதிய 1249 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட மாநகர சபை உப உறுப்புரையின் III ஆம் பிரிவின் 4(இ) பந்தியின் பிரகாரம் 08 கூறுவிலைகள் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த போதிலும், அக்கூறுவிலைகள் திறக்கப்படாமல் கேள்வி சமர்ப்பிக்கப்படாத தரப்பினருக்கு கெட்டம்பே விளையாட்டரங்கு களியாட்ட விழாவிற்கு ரூபா 4,000,000 இற்கு தற்காலிக குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது.

(ii) ரூபா 64,400 செலவிடப்பட்டு தேசிய பத்திரிகைகளில் பெறுகை அறிவித்தல் வெளியிடப்பட்டு 08 கூறுவிலைகள் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த போதிலும் எவ்வித காரணங்களும் குறிப்பிடப்படாமல் உரிய கேள்வி திறக்கப்படாமல் அக்கேள்விதாரர்களுக்கே மீள கையளிக்கப்பட்டிருந்தன.

(iii) 02 ஏக்கர் 01 றூட் 35 பேர்ச் அளவிலான கட்டுகஸ்தோட்ட ராகுல வித்தியாலய விளையாட்டரங்கு முறையான பெறுகை நடைமுறை பின்பற்றப்பட்டு ரூபா 8,542,300 இற்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும், 2.5 ஏக்கர் அளவிலான கெட்டம்பே மாநகர விளையாட்டரங்கு அக்காலப்பகுதிக்காக பெறுகை நடவடிக்கைகளை பின்பற்றப்படாமல் ரூபா 4,000,000 இற்கு கண்டியில் குடியிருக்கும் ஒருவருக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் பெறுகை நடவடிக்கைகள் பின்பற்றப்படாமல் குத்தகைக்கு வழங்கப்பட்ட காரணத்தினால் அண்ணளவாக ரூபா 4,542,300 தொகை சபை நிதியத்திற்கு நட்டமாக இருந்தது.

(ஆ) அஸ்கிரிய பஞ்சகர்ம நிலையத்தின் பதவியணியினர் உணவுச் செலவினத்திற்காக அங்கீகாரமின்றி மாதாந்தம் ரூபா 6,000 வீதம், மீளாய்வாண்டில் ரூபா 72,000 செலவிடப்பட்டிருந்தது.

(இ) மத்திய மாகாண ஆளுநரின் அங்கீகாரத்திற்கு உட்பட்டு பஞ்சகர்ம நிலையத்தின் மாதாந்த வருமானத்திலிருந்து 25 சதவீத ஊக்கவிப்பு படிகள் கொடுப்பனவு செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், அவ்வாறான அங்கீகாரமொன்று இல்லாமல் 2014 ஆகஸ்ட் முதல் 2017 யூன் வரையான காலப்பகுதிக்கு உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களுக்கு ஊக்குவிப்பு கொடுப்பனவிற்காக ரூபா 959,602 தொகை செலவிடப்பட்டிருந்தது.

(ஈ) அசவர சந்தர்ப்பமொன்றின் ரூபா 25,000 தொகை வரை செலவிடப்பட்டு உதிரிப்பாகங்கள் கொள்வனவு செய்து திருத்தம் செய்வதற்காக இயந்திர பொறியியலாளருக்கு அதிகாரம் கையளிக்கப்பட்டிருந்தது. அந்த அதிகாரத்திற்கு புறம்பாக எவ்வித அவசர செயற்பாடொன்றில்லாமல் ரூபா 30,000 முதல் ரூபா 268,115 வரையிலான வாகன உதிரிப்பாகங்கள், இயந்திர பொறியியலாளரின் கீழ் காணப்படும் இயந்திர வேலைத்தள காப்பாளரால் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. தெரிவுப் பரிசோதனையின் பிரகாரம் அதிகாரமின்றி 50 சந்தர்ப்பங்களின் போது ரூபா 3,818,078 தொகையான வாகன உதிரிப்பாகங்கள் மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

(உ) சபைக்குரிய 12.875 பேர்ச் காணி துண்டொன்று காணிப் பிரிவின் தலைவராக சேவை புரிந்த உத்தியோகத்தர் ஒருவரால் அவரின் மனைவியின் பெயரில் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. பின்னர் இக்காணியை அவர் பயன்படுத்துவதாக அவரால் சபைக்கு தெரிவிக்கப்பட்டதால் காணியை அவருக்கு கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. அவ்வாறே மத்திய மாகாண உள்ளூராட்சி மன்ற ஆணையாளரின் சுற்றறிக்கை பிரகாரம் குத்தகை கையளிப்பதன் போது குத்தகை மற்றும் கட்டணங்களாக ரூபா 6,198,500 அறவிடப்பட வேண்டிய போதிலும் அதற்கு புறம்பாக 2,486,000 அறவிடுவதாக குத்தகையாளருக்கு எழுத்துமூலம் அறிவிக்கப்பட்டிருந்தது.

### 3.7 பெறுகை

#### 3.7.1 வழங்கல் மற்றும் சேவைகள்

(அ) 10,000 சீமெந்து மூடைகளை கொள்வனவு செய்வதற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த பெறுமதி சேர் வரியின்றி ரூபா 752.17 ஆன குறைந்த கூறுவிலை கருத்திற் கொள்ளப்படாமல் ரூபா 782.61 தொகையான கூறுவிலை சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிறுவனமொன்றிடமிருந்து 10,800 சீமெந்து மூடைகள் கொள்வனவு செய்தமையால் சபை நிதியத்திற்கு 378,000 ஆன நட்டமொன்று இடம்பெற்றிருந்தது. அவ்வாறே அரசின் பெறுகை வழிகாட்டல் கோவையின் 5.3.18(அ) மற்றும் (ஆ) பிரிவுகளின் பிரகாரம் பெறுமதி சேர் வரி வெவ்வேறாக குறிப்பிடுமாறு கேள்விதாரர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்படாதிருந்ததுடன் கேள்வி மதிப்பீட்டின் போது சமர்ப்பிக்கப்பட்டிருந்த 03 நிறுவனங்களில் 2 நிறுவனம் கூறுவிலைகளுக்கு பெறுமதிசேர் வரி சேர்க்கப்பட்டு மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) 2006 அரசின் பெறுகை வழிகாட்டல் கோவையின் 6.3.1(ஆ), 6.1.4 மற்றும் 5.6.1(அ) வழிகாட்டல்களுக்கு முரணாக சந்தை நிலைமைகளுக்கு பொருந்தும் வகையில் விதந்துரைகள் தயாரிக்கப்படாமை மற்றும் திணைக்கள விதந்துரைகளுக்கு புறம்பாக ரூபா 2,632,260 பெறுமதியான 38 உருக்கு அலுமாரிகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

(இ) கண்டி நகரின் வீதிகளில் நிறுத்தப்படும் வாகனங்களிலிருந்து இலத்திரனியல் ஊடகத்தை பயன்படுத்தி கட்டணங்களை அறவிடும் சேவையொன்றை வடிவமைத்தல் மற்றும் அதனை செயற்படுத்தி வருமானத்தை சேகரிக்கும் தற்காலிக குத்தகை உரித்து 2017 மார்ச் 01 ஆந் திகதி முதல் 2019 பெப்ரவரி 28 ஆந் திகதி வரை 02 ஆண்டு காலப்பகுதிக்கான ரூபா 63,500,000 தொகைக்கு (அரசின் வரியின்றி) தனியார் நிறுவனமொன்றுக்கு கையளித்து 2017 ஏப்ரல் 05 ஆந் திகதி உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) பெறுகை வழிகாட்டல் கோவையின் 6.3.1(அ) பந்தியின் பிரகாரம் 2003 செப்தெம்பர் 05 ஆந் திகதிய 1304/18 ஆம் இலக்க வர்த்தமானியில்

வெளியிடப்பட்ட மாநகர சபை உப உறுப்புரையின் III ஆம் பகுதியின் 5(2) பந்தியின் ஏற்பாடுகளின் பிரகாரம் கேள்வி கோரும் ஆவணங்கள் மற்றும் சிங்கள மற்றும் தமிழ் பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட கேள்வி அழைப்புக்களில் ''பதிவுத் தபாலில்' கேள்வி சமர்ப்பிக்க வேண்டுமென குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

(ii) கேள்வி சமர்ப்பிக்கப்பட்டும் நிறுவனங்களினால் மென்பொருளின் (photo type) காட்சிப்படுத்தப்பட வேண்டுமென்ற நிபந்தனையொன்று உரிய கேள்வி ஆவணங்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) தெரிவு செய்யப்பட்ட கேள்விதாரரால் உரிய தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளதாக உறுதிப்படுத்துவதற்கு எழுத்துமூல சான்றுகள் வழங்கப்படாமல் இருந்ததுடன், கேள்வி கோரல் பதிவேட்டின் பிரகாரம் 2016 திசெம்பர் 08 ஆந் திகதி தொழில்நுட்ப கேள்வி ஆவணங்கள் திறக்கப்படுவதாக குறிப்பிடப்பட்டு 2016 திசெம்பர் 09 ஆந் திகதி தொழில்நுட்ப கூறுவிலை திறக்கப்பட்டு தொழில்நுட்ப அறிக்கையொன்று வழங்கப்பட்டிருந்தது. அவ்வாறே அத்திகதியில் தொழில்நுட்ப தகைமையுடைய பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தரொருவர் குழுவிற்கு பங்குபெறச் செய்யப்பட்டிருக்கவில்லை.

(iv) சபையால் தெரிவு செய்யப்பட்ட கேள்விதாரருடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்படாமல் 2017 பெப்ரவரி 22 ஆந் திகதி முதல் 2017 மார்ச் 31 ஆந் திகதி வரை பொதுவான நடைமுறையின் பிரகாரம் பற்றுச்சீட்டு வழங்கி வண்டிகளிலிருந்து கட்டணம் அறவிடும் தற்காலிக குத்தகை உரித்து வழங்கப்பட்டிருந்தது.

(v) செயலாற்றல் பாதுகாப்பு பிணை அரச வங்கியொன்றிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென ஏற்பாடுகள் காணப்படுகையில் குத்தகையாளரால் தனியார் வங்கியொன்றிலிருந்து பெற்று சமர்ப்பிக்கப்பட்ட செயலாற்றல் பாதுகாப்பு பிணை ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தது.

(vi) பெறுகை வழிகாட்டல் கோவையின் 5.4.8(அ) பந்தியின் பிரகாரம் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் செயலாற்றல் பாதுகாப்பு பிணை கேள்வித் தொகையில் 05 சதவீதத்திற்கு குறைவாக இருக்க கூடாதென குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அந்நிபந்தனைகளுக்கு முரணாக சபையினால் செயலாற்றல் பாதுகாப்பு பிணை ஒப்பந்த தொகையில் 100 சதவீதமாக வழங்கப்பட வேண்டுமென கேள்வி ஆவணங்களில் குறிப்பிடப்பட்டிருந்தது.

(vii) வாகனங்களை நிறுத்தும் போது அறவிடப்படும் தொகை தொடர்பான அல்லது ஏனைய சிக்கல் ஒன்று உருவாகினால் சிக்கலொன்று ஏற்பட்டால் அதற்காக சபை பொறுப்பேற்காது என கேள்லி ஆவணங்களில் குறிப்பிடப்பட்டிருப்பதால் பொதுமக்களுக்கு அசௌகரியம் ஏற்படுத்தவதற்கு வாய்ப்பிருந்தது.

**3.7.2 ஒப்பந்த நிர்வாகம்**

---------------------------------

(அ) மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சினால் தந்திரோபாய நகர அபிவிருத்தி நிதியம் மற்றும் சபை நிதியத்தின் மூலம் அஹலேபொல குமாரிஹாமி மாவத்தையில் வாரச்சந்தை மற்றும் அந்த காணியில் அமானோ தகர மேவுகையொன்றை தயாரிப்பதற்காக ஒப்பந்த நிறுவனமொன்றுடன் ரூபா 8,571,000 பெறுமதிக்கு உடன்படிக்கை மேற்கொண்டு ரூபா 1,714,175 ஆன முற்பணம்

கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வருமாறு விடயங்கள் அவதானிக்கப்பட்டது.

(i) கூரையுடன் கூடிய மேவுகையொன்று நிர்மாணித்தல் பொருத்தமற்றதாக நகர அபிவிருத்தி அதிகாரசபை பரிந்துரைத்திருந்த போதிலும் இது தொடர்பாக கவனத்திற் கொள்ளாமல் கூரையுடன் கூடிய மேவுகையொன்றை நிர்மாணிப்பதற்கு ரூபா 5,298,048 தொகை சபை நிதியத்திலிருந்து செலவிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது.

(ii) 2017 மார்ச் 28 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் ஒப்பந்தத்தை பூர்த்தி செய்து கையளிப்பதற்கு உடன்படிக்கை செய்யப்பட்டிருந்த போதிலும் 2017 செப்தெம்பர் 21 ஆந் திகதி வரை ஒப்பந்தக்காரர் போதியளவிலான வேலைப்பகுதியொன்றை நிறைவேற்றியிருந்ததுடன் அது தொடர்பில் எவ்வித மேற்பார்வையொன்றும் செய்யப்பட்டிருக்கவில்லை. 2017 ஏப்ரல் 16 ஆந் திகதி வரை உரிய ஒப்பந்தத்தின் செயலாற்றல் பிணை மற்றும் முற்பண பிணைப்பொறுப்பின் காலம் முடிவடைந்திருக்கையில் பிணைப் பொறுப்பின் காலத்தை நீடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) 2017 செப்தெம்பர் 27 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் கண்டறியப்பட்டன.

a வாரச் சந்தையின் கூரையை நிர்மாணிப்பதற்காக 2.5 மீற்றர் உயரத்துடன் கூடிய 3 மீற்றர்களுக்கு 3 மீற்றர் 75 மில்லிமீற்றர் G1 குழாய் நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் அந்த G1 குழாய் நிர்மாணிக்கப்பட்ட முறையின் பிரகாரம் திட்டங்களில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் வளைந்த வடிவில் கூரை நிர்மாணிக்கும் இயலுமையொன்று காணப்படவில்லை. இவ்வகையில் 41 G1 குழாய்கள் நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் 2018 யூலை 31 திகதி வரை இவ்வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

b மாநகர பொறியியலாளரால் 2017 மார்ச் 11 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு 03 ஆம் இலக்க வேலை விடயத்தின் கீழ் மண்வெட்டுவதற்காக 2/252.00m x 0.20 x 0.45m அளவுடன் கூடிய 45.36 கனமீற்றர் உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும் அவ்வாறான மண்வெட்டல் ஒன்று அவதானிக்கப்படவில்லை.

(ஆ) ரஜபிஹில்ல மாவத்தையின் பார்வையில் இடத்திற்கு அருகில் 200 மி.மீ நீர் குழாய்களை மாற்றும் வேலை 2017 யூன் 10 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டு 2017 ஒக்தோபர் 2017 ஒக்தோபர் அளவில் இடைநடுவில் விடப்பட்டிருந்ததுடன் அண்ணளவாக ரூபா 2,077,337 ஆன செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) கண்டி துனுமண்டலாவ நீர்த்தேக்கத்திலிருந்து அம்பிட்டிய பிரதேசத்திற்கும் கண்டி நகருக்கு நீர் விநியோகத்தை மாற்றும் தேவைப்பாடு தெளிவாக இல்லாமல் இருந்ததுடன் மேற்குறித்த நீர் முறைமை மாற்றியதால் 2017 ஒக்தோபர் 26 ஆந் திகதி வரையிலும் சபை நிதியத்திற்கு ரூபா 2,077,337 ஆன நட்டமொன்று ஏற்பட்டிருந்தது.

(ii) மேற்படி நீர் முறைமை மாற்றச் செயற்திட்டம் தொடர்பான சாத்தியவள ஆய்வொன்று மேற்கொள்ளப்படாதிருந்ததுடன் நிர்மாணம் ஆரம்பிப்பதற்கு முன்னர் அண்ணளவான திட்டமொன்று அல்லது பொருள், திட்ட மதிப்பீடு தயாரிப்பதற்கு அல்லது சபையின் முறையான முன் அங்கீகாரம் பெற்றுக்கொள்வதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) நேர் முறைமை பயன்படுத்தி செயற்படுத்தப்பட்டிருந்த செயற்திட்டத்தின் நீர் குழாய் உபபாகங்களின் பாதுகாப்பு தொடர்பான மேற்பார்வை உத்தியோகத்தரின் முறையான கண்காணிப்பொன்று இல்லாமை காரணமாக ரூபா 220,520 பெறுமதியான 11 நீர் குழாய் உபபாகங்கள் செயற்திட்ட வளவில் காணாமல் போயிருந்தது.

(iv) 2017 நவம்பர் 15 ஆந் திகதி மேற்கொண்ட பௌதீக பரிசோதனையின் பிரகாரம் 300 மி.மீ அளவிலான விட்டத்துடன் கூடிய நீர் குழாயினால் எடுத்து வரப்படும் நீர் 200 மீ.மீ விட்டத்துடனான குழாய்க்கு தொடர்புபடுத்தப்பட்டு பார்வையாளர் நிலையத்தை சுற்றி 80 மீற்றர் பயணித்து மீண்டும் 300 மீ.மீ குழாயுடன் தொடர்புபடுத்தப்பட்ட காரணத்தினால் ஏற்படும் அழுத்தத்தினால் நீர் குழாய்களுக்கு சேதம் ஏற்படக்கூடிய வாய்ப்பு காணப்பட்டது.

(இ) சபை நிதியத்தின் கீழ் ரூபா 2,047,766 இற்கு மதிப்பீடு செய்யப்பட்டு நேர் உழைப்பு அடிப்படையில் பம்பி கூடத்தை சுற்றி வேலி அத்திவாரம் கொங்கிரீட்டினால் நிர்மாணிக்கப்பட வேண்டிய போதிலும் அங்கீகாரம் மற்றும் மதிப்பிடப்பட்ட திருத்தமொன்று இல்லாமல் கருங்கல் அதி வாரச்சுவர் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. நிர்மாணிக்கப்பட வேண்டிய Chaink link வேலியில் அண்ணளவான பொருத்துகை கிடைஅச்சாக ¾ G1 குழாய் பொருத்த வேண்டிய போதிலும் அத்திவாரத்தின் மீது கொங்கிறீட் இட்டு கீழாக தொடர்புபடுத்தப்பட்டிருந்தது.

(ஈ) தேவைப்பாடு மற்றும் எழுத்துமூல அனுமதியொன்று இல்லாமல் வேலை அத்தியட்சகரின் வாய் மொழி அறிவுறுத்தலின் பிரகாரம் R3 பம்பியரையின் பாதுகாப்பு கல் மதிலொன்று நிர்மாணிக்கப்பட்டிருந்தது. இதற்காக செலவான பணத்தை இனங்காணக்கூடிய வகையில் ஆவணங்கள் பேணப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே கருங்கல் சுவர் நிர்மாணிப்பதற்காக 6’x9’ அளவினை மிகைத்து பாரியளவில் கற்கள் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன், சுவர் நிர்மாணிப்பதற்கு பயன்படுத்தப்பட்டிருந்த மணல் சீமெந்துடன் சாந்து கலவை பலவீனமான மட்டத்தில் காணப்பட்டது. இதற்காக பொறுப்பான உத்தியோகத்தர் ஒருவர் பரீட்சித்து முடிவு அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) நீர் கைத்தொழில் திணைக்களத்தினால் மீளாய்வாண்டில் செயற்படுத்தப்பட்டிருந்த ரூபா 31,056,543 பெறுமதியான 33 அபிவிருத்தி செயற்திட்டங்களுக்குரிய வேலைப் பத்திரத்துடன் கூடிய கோவையால் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

## 4. நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

-------------------------------------------------------------------

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

-----------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டிற்காகத் தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டுப் பதிவேட்டின் படி, மதிப்பிடப்பட்ட வருமானம் மற்றம் செலவினம், உள்ளபடியான வருமானம் செலவினத்துடன் ஒப்பிடப்படுகையில் 02 வருமான விடயங்களில் 14 சதவீதம் 27 வரையிலும் 04

செலவின விடயங்களில் 16 சதவீதம் 67 வரையிலும் விலகல் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டு சாதனமாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2014 மார்ச் 20 ஆந் திகதிய 2014/02 ஆம் இலக்க மத்திய மாகாண உள்ளுராட்சி மன்ற ஆணையாளரின் சுற்றறிக்கையின் பிரகாரம் நிறைவேற்றப்பட்ட பாதீட்டின் பிரகாரம் ஆண்டினுள் நிதி நடவடிக்கைகளை நிர்வகிக்கப்பட வேண்டிய போதிலும் 40 செலவின விடயங்களுக்காக மதிப்பீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாட்டை விஞ்சி ரூபா 114,938,913 செலவிடப்பட்டிருந்தது.

(இ) செலவினம் தொடர்பாக மூன்றாண்டு பாதீடு புலனாய்வு செய்யப்படாமை காரணமாக 47 செலவின விடயங்களின் நிதிஏற்பாட்டை மிகைத்து ரூபா 12,101,000 செலவின் மேற்கொண்டதன் பின்னர் செலவு மாற்றப்பட்டு பின்னர் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டில் 16 மூலதனச் செலவின விடயங்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த ரூபா 20,992,014 நிதிஏற்பாட்டின் 75 சதவீதம் முதல் நூறு வீதம் வரையான வீச்சில் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(உ) ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதிஏற்பாடு மிகைக்கும் சந்தர்ப்பத்திலேயே அது தொடர்பாக இனங்காணப்படாமல் 169 செலவின விடயங்களுக்காக ரூபா 137,846,000 ஆன திரட்டிய மாற்றல் ஒன்றாக விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டு 2017 திசெம்பர் 29 ஆந் திகதி அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. இங்கு எந்த செலவின விடயத்திலிருந்து எந்த விடயத்திற்கு நிதிஏற்பாடு மாற்றப்படுகின்றன்தென்பது தொடர்பாக வெவ்வேறாக குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

(ஊ) ஆயுர்வேத மருந்தகத்திற்கு தேவையான மருந்துகளை திட்டவட்டமாக இனங்காணாமல் 02 செலவின விடயங்களுக்காக அண்ணளவான பெறுமதியொன்றிாக ரூா 4,500,000 ஆன நிதிஏற்பாடு மேற்கொள்ளப்பட்டு அதிலிருந்து ரூபா 2,865,348 சேமிக்கப்பட்டிருந்தது.

(எ) அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக 06 செலவின விடயங்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த ரூபா 127 மில்லியான நிதிஏற்பாட்டிலிருந்து ரூபா 118 மில்லியன் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களுக்கு பயன்படுத்தப்படாமல் ஏனைய மூலதன செலவின விடயங்களுக்கு மாற்றப்பட்டிருந்தது. அவ்வாறே 02 மூலதன செலவின விடயங்களுக்காக ரூபா 2.94 மில்லியனான நிதிஏற்பாடு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வவ்போது சபையின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருந்ததுடன் பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக சபையின் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| முறைமைகள் | குறைபாடுகள் |
|---|---|
| (அ) வருமான நிருவாகம் | (i) நிலுவை வருமான அறவிடப்படாமை |
| | (ii) குத்தகை உடன்படிக்கை கைச்சாத்திடாமை |
| | (iii) குத்தகை உடன்படிக்கை புதுப்பிக்கப்படாமை |
| (ஆ) கணக்கீடு | (i) கணக்கேடுகள் மற்றும் ஆவணங்கள் நாளதுவரையறுக்கப்படாமை |
| | (ii) பொது பேரேட்டில் சகல கணக்குகளும் உள்ளடக்கப்படாமை. |
| (இ) சொத்துக்கள்/ஆதனங்கள் | (i) பாதுகாப்பு உறுதிப்படுத்தபப்படாமை |
| | (ii) உரிய காலத்தில் கைதவிர்ப்பு செய்யப்படாமை |
| (ஈ) இருப்புக் கட்டுப்பாடு | (i) முறையற்ற இருப்புக் கட்டுப்பாடு |
| | (ii) இருப்பு பேரேடு நாளது வரையாக பேணப்படாமை |

| | | | |
|---|---|---|---|
| | | (iii) | முறையான கணிப்பீட்டினை பேணப்படாமை |
| (உ) | கடன்பட்டோர் / கடன்கொடுத்தோர் | (i) | அட்டவணை சரியாக இல்லாமை |
| | | (ii) | காலப்பகுப்பாய்வு சமர்ப்பிக்கப்படாமை |
| | | (iii) | கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் முறையான தீர்வுசெய்யப்படாமை |
| (ஊ) | செயற்திட்டங்கள் / ஒப்பந்தங்கள் | (i) | மதிப்பீடு தயாரிக்கப்படாமை |
| | | (ii) | வேலைப்பத்திரங்கள் முறையாக பேணப்படாமை |
| \ | | (iii) | போதியளவு மேற்பார்வை இல்லாமை |